DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.127/2021**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தியாகராஜன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | நாராயணன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், குளித்தலையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும் பார்த்துள்ளேன். 25.09.2017 ம் தேதி காலை 11.30 மணியிருக்கும் நான் கரூருக்கு இருசக்கர வாகனத்தில்சென்று கொண்டிருந்தேன். போலிசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்தார்கள். என்னைத் தேக்கி விசாரித்ததார்கள். எனக்குப்பின்னால் ஆஜர் எதிரி SPlender மாதிரி ஒரு வண்டியில் வந்து திரும்பினார் அவரை போலிசார் பிடித்து விசாரித்தார்கள். அந்த வண்டியில் Number Plate இல்லாமல் இருந்ததது.

2. போலிசார் எதிரியை பிடித்து விசாரித்தார்கள் பின்பு போலிசார் எதிரியை வாய்க்கால் பாலம் அருகே கூட்டிச்சென்று அங்கிருந்து எதிரி எடுத்துக் கொடுத்த லேப்டாப், செல்போன் ஆகியவற்றை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள CPU, Monitor, Keyboard, Mouse ஆகியவற்றைத்தான் எதிரி ஆஜர் செய்த மாதிரி இருந்தது . போலிசார் என்னை விசாரித்தார்கள். (**CPU, Monitor, Keyboard, Mouse அடங்கிய புகைப்படம் அ.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது.)**

3. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூல நகலில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**ஒப்புதல்** வாக்குமூல நகலில் **உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ-5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. போலிசார் எந்த தேதியில் எப்போது கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியாக ஞாபகமிலலை. எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். என்னசொல்லி கையொப்பம் வாங்கினார்கள் என்றால் வண்டி, லேப்டாப், செல்போன் எதிரியிடன் சென்று கைப்பற்றியதற்காக கையொப்பம் வாங்கினாகள். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கியதை நான் படித்துப்பார்த்தேனா என்றால் அப்போது படித்துப்பார்த்தேன். அதில் என்ன எழுதியிருந்த விவரம் தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

2. எந்த இடத்தில் இருந்து போலிசார் அழைத்துச்சொன்றார்கள் என்றால் முடக்குச்சாலையில் இருந்து பாலம் மாதியிரியிருக்கும் இடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். யார் யார் சென்றார்கள் என்றால் 2 போலிசார் வந்தார்கள். பின்னால் 2 பேர் வந்தார்கள் யார் என்று தெரியவில்லை. போலிசார் எத்தனை பொருட்கள் எடுத்தார்கள் என்றால் நான் எண்ணவில்லை. நான் அவசர நிமித்தமாக கரூர் சென்றேனா என்றால் இல்லை. எதிரியை எந்த இடத்தில் வைத்து பிடித்தார்கள் என்றால் முடக்குச்சாலையில் வைத்து பிடித்தார்கள்.

3. எதிரியை பிடித்த இடத்திலிருந்து பொருட்கள் எடுத்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் 2 1/2 யிலிருந்து 3 கி.மீ. இருக்கும். எத்தனை மணியிருக்கும் என்றால் சரியான நேரம் தெரியவில்லை. என்னிடம் போலிசார் அடையாள அட்டை ஏதாவது வாங்கினார்களா என்றால் இல்லை. அன்றைய தேதியில் எத்தனை வழக்கு போலிசார் போடுவதாக கையொப்பம்

வாங்கினார்கள் என்றால்  3 வழக்கோ, 2 வழக்கோ என்று சொன்னார்கள் சரியாக ஞாபகமில்லை.

4. பொருள் எடுத்த இடத்திற்கு போலிசார் எதிரியை அழைத்து வரவில்லை என்றால் அழைத்து வந்தார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிப்பது வாடிக்கை என்றால் சரியல்ல. அன்றைய தினம் குளித்தலையிருந்து கருர் செல்லவில்லை போலிஸ் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பகுதி போலிசார்ரிடம் மற்றவர்களிடம் கூப்பிட்டு இருக்கலாம் என்று நான் சொல்லியிருக்கலாம் என்னுடைய வண்டியை தேக்கி விசாரித்தார்கள்.

5. நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் என் மீது வழக்கு போடுவேன் என்று மிரட்டியதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொருட்கள் எடுத்ததாக சொல்லப்படும் பகுதிக்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த பொருளும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 15:12:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.